# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2021
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2021
The Australian Society of Graduate Tamils (ASoGT)

## கவிதை மனனப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 3)

1. **கவிதை மனனப் போட்டி - (பாலர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு)**

போட்டிக்குக் கொடுக்கப்படும் கவிதைகளை மனனஞ் செய்து கூறல் வேண்டும். ஆனால் அவற்றின் பொருளைக் கூறவேண்டியதில்லை. பாலர் பிரிவிலும், ஆரம்ப பிரிவிலும் ஒவ்வொரு போட்டியாளருக்கும் **3** நிமிடங்களும், கீழ்ப்பிரிவில் ஒவ்வொரு போட்டியாளருக்கும் 5 நிமிடங்களும் வழங்கப்படும்.

2. **விசேட கவிதை மனனப் போட்டி - (மத்திய பிரிவு, அதிமேற் பிரிவு)**

இணைப்பு 14, இணைப்பு 15 இல் எம்மால் கொடுக்கப்பட்ட திருக்குறள்களையும் அதற்கான பொருள்களையும் மனனம் செய்து மத்திய பிரிவு, அதிமேற் பிரிவு போட்டியாளர்கள் கூற (ஒப்புவிக்க) வேண்டும். இவற்றில் எந்த மாற்றங்களும் செய்தல் ஆகாது. எனினும் போட்டியாளர்கள் சரியான முறையில் பொருள்விளங்க அவற்றைப் பிரித்தோ சேர்த்தோ கூறலாம். ஒவ்வொரு குறளையும் பொருளையும் ஒரு முறை கூறுவதே போதுமானதாகும். இரண்டு முறைக்கு மேல் ஒரே குறளையும் பொருளையும் கூறுமிடத்து மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
**அதிமேற் பிரிவு:** இப்போட்டிக்குப் பத்து திருக்குறள்கள் பொருள்களுடன் கொடுக்கப்படும். பத்துக் குறள்களையும் அவற்றின் பொருள்களுடன் பிழையின்றித் தெளிவாகக் கூறல் வேண்டும்.
**மத்திய பிரிவு:** இப்போட்டிக்கு ஐந்து திருக்குறள்கள் பொருள்களுடன் கொடுக்கப்படும். ஐந்து குறள்களையும் அவற்றின் பொருள்களுடன் பிழையின்றித் தெளிவாகக் கூறல் வேண்டும்.

3. **விசேட கவிதை மனனப் போட்டி – ஆத்திசூடி (பாலர் பிரிவு, ஆரம்பப் பிரிவு)**

இணைப்பு 12, இணைப்பு 13 இல் எம்மால் கொடுக்கப்பட்ட ஆத்திசூடியையும் அதற்கான விளக்கத்தையும் மனனம் செய்து பாலர் பிரிவு, ஆரம்பப் பிரிவு போட்டியாளர்கள் கூற வேண்டும். இப்போட்டிக்கு 7 ஆத்திசூடிகள் கொடுக்கப்படும். இவற்றில் எந்த மாற்றங்களும் செய்தல் ஆகாது. ஒவ்வொரு ஆத்திசூடியையும் பொருளையும் ஒரு முறை கூறுவதே போதுமானதாகும். இரண்டு முறைக்கு மேல் கூறுமிடத்து மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
**ஆரம்பப் பிரிவு:** இப்போட்டிக்குப் ஏழு ஆத்திசூடிகள் பொருள்களுடன் கொடுக்கப்படும். ஏழு ஆத்திசூடிகளையும் அவற்றின் பொருள்களுடன் பிழையின்றித் தெளிவாகக் கூறல் வேண்டும்.
**பாலர் பிரிவு:** இப்போட்டிக்கு மூன்று ஆத்திசூடிகள் பொருள்களுடன் கொடுக்கப்படும். மூன்று ஆத்திசூடிகளையும் அவற்றின் பொருள்களுடன் பிழையின்றித் தெளிவாகக் கூறல் வேண்டும்.

4. போட்டியின் போது **உச்சரிப்பு (30%), பொருளுணர்ந்து கூறுதல் (25%), சபை மரபும்** ஆதிக்கமும் (30%) மனனஞ் செய்யும் திறமை (15%) ஆகியன கவனிக்கப்படும்.

5. **உச்சரிப்புத் திறன்** (30 %)

- ❖ முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள/ ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகளையும், வல்லின, இடையின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
- ❖ தூய தமிழ் உச்சரிப்பு
- ❖ சொற்களை விழுங்காது ஒப்புவித்தல் (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)
- ❖ பாலர் பிரிவுக் குழந்தைகளின் மழலைத் தமிழுக்குப் புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது.

6. **பொருள் உணர்ந்து கூறும் திறன்** (25%),

- ❖ பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
- ❖ ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்திக் கவிதையைக் கூறுதல்

- வரிகளுக்குத் தகுந்த உணர்ச்சி (மிகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், முரணான சைகைகளைப் பயன்படுத்துதல், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் பிடித்தல் போன்றவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்).

7. **சபை மரபு - ஆதிக்கத்திறன்** (30%)

- மண்டபத்துள் நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையிலே தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து கவிதையை ஆரம்பித்தல். ஆரம்பத்திற் சபையோருக்கு வணக்கம் தெரிவிக்கும் போதும் இறுதியில் நன்றி கூறும் போதும் தரப்பட்டுள்ள வசனங்களை மட்டுமே பாவித்தல் வேண்டும். இவற்றில் எந்த மாற்றங்களும் செய்தல் ஆகாது. மிகைப்படுத்தப்பட்ட வேறு வசனங்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
- கவிதையை ஒப்புவிக்கும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும், செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)
- சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல்.(குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆகியவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.
- முக பாவனை: கவிதையின் பொருளை அனுபவித்து, இரசித்து ஒப்புவிக்கும் பாங்கு.
- முக்கியமாகக் கவிதையைக் கவிதை நடையிற் கூறவேண்டும்.

8. **மனனஞ் செய்யும் திறன்** (15%)

- போட்டிக்குக் கொடுக்கப்பட்ட கவிதையை மனனஞ் செய்யும்பொழுது அதிலே எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது.

- சொற்களைத் தவறவிடாது, மாற்றாது முழுவதையும் கூறுதல் (கவிதையில் வரும் சொற்களை அல்லது வரிகளைத் தவறவிடுமிடத்தோ, அல்லது மாற்றுமிடத்தோ புள்ளிகள் குறைக்கப்படும்).

- சரளமான ஆற்றொழுக்கான ஒப்புவிப்பு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வரியைத் தடுமாற்றம் காரணமாகத் திரும்பச் சொல்லுதல் ஆகியவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்).
- எழுத்துப் பிரதியையோ அல்லது துணைக்குறிப்பையோ பார்த்துக் கவிதையைக் கூறமுடியாது. இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- கவிதையில் வரும் வரியை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் விட்ட இடத்திலிருந்து தொடங்க உதவலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்தும், புள்ளிகள் குறைக்கப்படும்.

- போட்டி நடைபெறும் வேளையில் பார்வையாளர்கள் (போட்டியாளர்களைச் சார்ந்த பெற்றோர் போன்றவர்கள் உட்பட) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது.

9. எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். மேலதிக விளக்கம் தேவைப்படின் எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளிலே தொடர்பு கொள்ளவும்.

10. போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**